*Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 5(1) 2022*
*Published by Faculty of Islamic Studies and Arabic Language, ISSN: 2550:3014*
*Received: 21st February 2022/Accepted: 30th June 2022*

# அழகியல் அறுவை சிகிச்சை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்: கோட்பாட்டு அடிப்படையிலானதோர் ஆய்வு

## (The Islamic Perspective on Aesthetic Surgery: A Theoretical Based Research)

Sharmina. A.M.F[1], Ismiya Begum. M.S[2], Ilma. M.A.F[3], Sajith S.A.[4]
[1,3&4]Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka
[2]Lecturer (Probationary), Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka
fathimashrmy@gmail.com [1], izzahis123@gmail.com[2],
ilmaanees97@gmail.com[3], sajithbinzain@gmail.com[4]

## Abstract

*This is a qualitative study aimed at exploring the Islamic perspective on aesthetic surgery in the shadow of the Qur'an and Sunnah. For this study, which consists of secondary data, the Islamic legal sources, Islamic historical sources as well as the data obtained from the articles and studies of contemporary Muslim scholars related to aesthetic surgery are analyzed and the results are presented. There are two types of plastic surgery: cosmetic/aesthetic and reconstructive surgery. Reconstructive surgery is aimed at reconstructive a part of the body or improving its function, while cosmetic surgery is performed with the sole aim of beauty even when there are no physical problems. This study finds that Islam welcomes the use of plastic surgery for the benefit of human beings, and prohibits cosmetic surgery, which can be performed without any valid reason to cause a change in God's creation.*

***Keywords:*** *Cosmetic/Aesthetic surgery, Reconstructive surgery, Islam, Islamic perspective*

**ஆய்வுச் சுருக்கம்**

அழகியல் அறுவை சிகிச்சை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை அல்குர்ஆன், சுன்னாவின் நிழலில் ஆராய்வதனை நோக்காகக் கொண்டு மேற்க்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது பண்பு (Quantitative) ரீதியில் அமைந்த கோட்பாட்டு அணுகுமுறையில் (Theorotical approach) அடிபப்டையிலான ஆய்வாகும். இரண்டாம்தர மூலாதாரங்களை (Secondary datas)க் கொண்டமைந்த இவ்வாய்வுக்காக இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களின் ஆதாரங்கள் மற்றும் இஸ்லாமிய வரலாற்று ரீதியிலான ஆதாரங்கள் என்பவற்றோடு அழகியல் அறுவை சிகிச்சை தொடர்பான சமகால முஸ்லிம் அறிஞர்களின் ஆக்கங்கள், ஆய்வுகள் போன்றவற்றில் இருந்தும் பெறப்பட்ட தகவல்கள் தொகுத்தறிதல் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை முறையானது ஒப்பனை அல்லது அழகியல் அறுவை சிகிச்சை (Cosmetic/Aesthetic) மற்றும் புணரமைப்பு (Reconstructive) செய்வதற்கு மேற்கொள்ளப்படக் கூடிய அறுவை சிகிச்சை போன்ற இரண்டு வகையில் மேற்கொள்ளப்படுகின்றது. மறுசீரமைப்பு செய்வதற்கு மேற்கொள்ளப்படக் கூடிய அறுவை சிகிச்சை (Reconstructive Surgery) உடலின் ஒரு பகுதியை புணரமைத்தல் அல்லது அதன் செயல்பாட்டை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, ஒப்பனை அறுவை சிகிச்சையானது (Cosmetic Surgery) உடல் ரீதியாக எவ்வித பிரச்சினைகளும் இல்லாத போதும் அழகை மட்டும் நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. மனிதனின் நலனுக்காக வேண்டி பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மேற்கொள்வதை இஸ்லாம் வரவேற்கின்றதோடு,

இறைவனுடைய படைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில், நியாயமான காரணங்கள் எதுவுமின்றி மேற்கொள்ளப்படக் கூடிய ஒப்பனை அறுவை சிகிச்சையை இஸ்லாம் தடைசெய்கின்றது என்பது இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாய்வானது அறுவைச்சிகிச்சை முறை தொடர்பான இஸ்லாமிய நோக்கினை மக்கள் தெளிவாக புரிந்துகொள்வதற்கு வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்:** ஒப்பனை/அழகியல் அறுவை சிகிச்சை, புணரமைப்பு அறுவைச்சிகிச்சை, இஸ்லாம், இஸ்லாமிய நோக்கு

## 1. அறிமுகம்

சமகாலத்தில் நவீன தொழிநுட்ப வளர்ச்சியின் ஊடாக ஏற்பட்டுள்ள வாழ்வியல் மாற்றங்களுள் அழகியலோடு இயைந்த சிகிச்சை முறைகளும் ஒன்றாகும். அழகியல் சிகிச்சைகள் என்பது மருத்துவ சிகிச்சையின் ஒரு பிரிவாக காணப்படும். இவை ஒரு நபரின் தோற்றப் பொலிவையும், உருவ அமைப்பினையும் சரி செய்ய பயன்படுத்தப்படும் மருத்துவத்தின் ஒரு பிரிவாக காணப்படுகின்றன (Kathirawan, 2020). உலகளாவிய ரீதியில் அழகியல் அறுவை சிகிச்சைகள் அதிகமாக வயது மற்றும் பால் வேறுபாடின்றி இளைஞர்கள், வயதானவர்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் என அனைத்து தரப்பினர் மத்தியிலும் செல்வாக்கு பெற்று வருகின்றன. குறிப்பாக, பெண்கள் தம்முடைய தோற்றத்தில் மேம்பாட்டினை உருவாக்குவதற்காக விருப்பத்துடன் அழகியல் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்கின்றனர். (Muslu & Demir, 2020).

இவ்வழகியல் சிகிச்சைகள், அறுவை சிகிச்சை முறை, அறுவை சிகிச்சை அல்லாத முறை என இரு வகைப்படுகின்றன. இவற்றில் ஒருவரின் தேவைக்கு ஏற்ற சிகிச்சை முறையினை மருத்துவர்கள் தேர்வு செய்து பரிந்துரைக்கின்றனர். அவற்றுள் தலைமுடி மாற்று (Hair transplant), ஆண்களுக்கு ஏற்படும் மார்பகங்கள் பிரச்சினை (Male Breast/Gynecomastia), உடல் கொழுப்பினைக் குறைத்தல் (Liposuction), பெண் மார்பகங்கள் அளவினை அதிகப்படுத்தல் அல்லது குறைத்தல் (Female Breast Enlargement Or Reduction), கர்ப்பத்துக்கு பின் ஏற்படும் அடிவயிற்றின் பருமனை சரிசெய்தல் (Abdominoplasty or Tummy Tuck), காது ஓட்டையினை சரி செய்தல் (Ear Lobe Repair) போன்றவற்றினை அறுவைசிகிச்சை உடனான அழகியல் சிகிச்சைகளுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். அறுவை சிகிச்சை அற்ற முறைகளுக்கு உதாரணமாக முகப் பொலிவினைக் கூட்டுவதற்கான (Chemical Peels, Lasers, Mesotherapy, Skin Polishing Treatments), முடி உதிர்வை குறைப்பதற்கான (PRP, PRF, Light Therapy, Cell Therapy) முகப்பருக்கள் மற்றும் தழும்புகளை சரி செய்வதற்கான (Acnes & Acne Scar management), முகச்சுருக்கங்கள் மற்றும் தொய்வினை நீக்கி இளமை தோற்றம் பெறுவதற்கான (Botox, Fillers & Thread Lift Treatments) சிகிச்சைகளை இவற்றுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். (Kathirawan, 2020). Marky & Marky ஆகியோர், அமெரிக்க பெண்கள் ஒப்பனை அறுவை சிகிச்சை பெறுவதில் ஆர்வம் காட்டியமைக்கான காரணிகளை ஆராய்ந்து நான்கு விடயங்களை முன்வைத்துள்ளனர். அவை உடல் அதிருப்தி, உடல் தோற்றம், கிண்டல் (சுமார் 11 வெவ்வேறு உடல் பாகங்களை கிண்டல் செய்தல்) மற்றும் ஊடக செல்வாக்கு (ஊடகங்களில் பிரசித்தி பெற்ற மக்கள் போல் தோன்ற நினைத்தல்) என்பனவாகும். ஒப்பனை அறுவை சிகிச்சை பெறுவதில் அவர்களின் ஆர்வத்தின் சிறந்த முன்கணிப்பு உடல் அதிருப்தி என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும் (Marky & Marky, 2009). மேலும், சுயமரியாதை மற்றும் சுயகௌரவத்தை அதிகரித்தல், முன்னைய இளமையின் அழகை திருப்பி பெறல், எதிர் பாலினத்தைக் கவரல், தனது துணையை மகிழ்ச்சியடையச் செய்தல், பிரபலங்களைப் போல தன்னை மாற்றிக்

கொள்ளல் போன்ற காரணங்களுக்காகவும் அறுவைச்சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (Torgerson, 2021).

அழகியல் அறுவை சிகிச்சையில் அந்த சிகிச்சையை மேற்கொள்பவரின் கலாசாரம் மற்றும் மத நம்பிக்கைகள் என்பன அதிக தாக்கம் செலுத்துகின்றன (Hassan, Majed, & Albar, 2020). இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் மனித ஆன்மாவை கவனிப்பது போலவே உடலுக்கும் முக்கியத்துவம் வழங்கியுள்ளது. இஸ்லாம் உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்று பகுதிகளிலும் சமநிலையைப் பேணுகிறது. (Fakeehuddheen, 2017). எனவே, ஒரு மனிதன் இறைவன் தனக்கு வழங்கியுள்ள உடல் அமைப்பிற்கு என்றும் நன்றியுடையவனாகவும், இறைவன் தனக்கு வழங்கியுள்ள அழகு குறித்து திருப்தி அடைந்தவனாகவும் இருத்தல் வேண்டும் (Muslu & Demir, 2020). இஸ்லாத்தின் பார்வையில் அறுவை சிகிச்சைகள் தொடர்பாக நோக்கும்போது, அவை அனுமதிக்கப்பட்ட அழகியல் அறுவை சிகிச்சைகள், அனுமதிக்கப்படாத அழகியல் அறுவை சிகிச்சைகள் என இரண்டு வகைப்படுகின்றன (Hassan et.al,2020). இவ்வாறு குறித்த கோட்பாட்டுத்தெளிவினை முன்னிறுத்திய ஆய்வுகள் பல இடம்பெற்றிருப்பினும் அவை குறிப்பிட்ட சில விடயங்களை மாத்திரம் மையமப்படுத்தியதாகக் காணப்படுகின்றன. குறிப்பாக, இஸ்லாமிய சட்டவியல் நோக்குகள் (மகாசித்) அடிப்படையில் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட மற்றும் அனுமதிக்கப்படாத அறுவைச்சிகிச்சை முறைகள். (Hassan et.al,2020), அழகியல் அறுவை சிகிச்சை தொடர்பான வரலாறு மற்றும் அதன் வகைகள் (Bagnid, 2007), அழகியல் அறுவை சிகிச்சையின் தோற்றம், வளர்ச்சி, அதன் வகைகள் மற்றும் அது தடை செய்யப்பட்டதற்கான ஒரு சில அல்குர்ஆன் ஆதாரங்கள் (Obeidat, 2016). ஒரு முஸ்லிமுக்கும் வைத்தியருக்கும் இடையில் இருக்க வேண்டிய தொடர்பு குறித்த இஸ்லாமிய போதனைகள் மற்றும் அது தடை செய்யப்பட்டமைக்கான பிரதான காரணம் அல்லாஹ்வின் படைப்புகளை மாற்றுதல் (Atiyeh et.al, 2007) போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. இருப்பினும் இவை குறித்து இன்னும் ஆழமாக ஆய்வு செய்ய வேண்டிய தேவைப்பாடு உள்ளது என்ற அடிப்படையில் இவ்வாய்வானது அறுவைச்சிகிச்சை தொடர்பான பல விடயங்களை அல்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஏனைய இஸ்லாமிய அடிப்படை கொள்கைகளுடன் இணைத்து விளக்கியுள்ளதோடு இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட மற்றும் அனுமதிக்கப்படாத அழகியல் அறுவை சிகிச்சை முறைகளை இஸ்லாமிய நோக்கில் ஆதாரங்களை முன்வைத்து விளக்கியுள்ளதோடு மட்டுமல்லாது இச்சிகிச்சைகள் தடுக்கப்பட்டமைக்கான காரணங்களாக படைப்பினங்களின் ஒழுங்கில் மாற்றம் செய்தல் என்பவற்றோடு வீண்விரயம், உடல் சிதைக்கப்படுகின்றமை, நோக்கம் தவறானதாகக் காணப்படுதல் போன்ற விடயங்களையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

அழகியல் அறுவை சிகிச்சைகள் முற்றுமுழுதாக ஒருவரின் உடலை மையப்படுத்தியதாகக் காணப்படுவதனால் அவை பல விளைவுகளையும் ஆபத்துக்களையும் ஏற்படுத்துகின்றன. இச்சிகிச்சைகளினூடாக மக்கள் தமது தோற்றத்தினை அழகாக்குவதற்கான செயல்பாடுகளில் ஈடுபடுகின்ற போது அவை அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாற்றமான முடிவினை வழங்கும் போது ஏமாற்றமடைகின்றனர். இது உணர்ச்சி தொடர்பான பிரச்சினைகளுக்கு வழிவகுக்கக் கூடியதாக இருக்கிறது (Illiades, 2020). இவ்வழகியல் சிகிச்சைகளின் காரணமாக உறுப்புகளில் சேதங்கள் ஏற்படுகின்றன. அதாவது இச்சிகிச்சையானது உள்ளுறுப்புகளுடன் தொடர்பு கொள்ளும் போது உள்ளுறுப்புகளில் துளைகள் ஏற்படும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. அத்தோடு சிகிச்சையினை மேற்கொள்ளும்போது சுய நினைவிழக்கச் செய்வதற்காக மயக்க மருந்தினை உபயோகிப்பதன் மூலம் சிக்கல்கள் ஏற்படுவதோடு பல்வேறு வகையான அழகியல் அறுவை சிகிச்சை முறைகளில் நரம்பு சேதத்திற்கான சாத்தியம் காணப்படுகிறது. இந்நிலைமை

பெரும்பாலான பெண்களின் மார்பகப் பெருக்க அறுவை சிகிச்சைக்குப் பிறகு ஏற்படுகிறது (Schaefer, 2019). அத்தோடு அழகியல் அறுவை சிகிச்சைக்கு அதிக செலவுகள் ஏற்படுவதால் நிதிப் பிரச்சினை உருவாகிறது. குடும்பத்தில் கணவன் - மனைவிக்கு இடையிலான முரண்பாடு, சண்டை, புரிந்துணர்வின்மை போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது. மேலும் இன்றைய இளம் தலைமுறையினர் இவ் அழகியல் அறுவை சிகிச்சைகளில் அதிக ஆர்வம் கொண்டிருப்பதன் விளைவாக அவர்கள் தவறான வழிகளுக்கு செல்கின்ற நிலைமைகளும் உருவாகியுள்ளன (Goudreau, 2011). இஸ்லாம் அனைத்து அழகியல் சிகிச்சைகளையும் ஆதரிக்கவில்லை. இஸ்லாத்தின் பார்வையில் சிலது அனுமதிக்கப்பட்டதாகவும், சிலது தடுக்கப்பட்டதாகவும் காணப்படுகின்றன. இருப்பினும் முஸ்லிம்கள் இது பற்றிய போதிய அறிவின்றி தடுக்கப்பட்ட அழகியல் சிகிச்சைகளை அதிகம் மேற்கொள்கின்றமை சாதாரண விடயமாக மாறியுள்ளது எனவே, இது குறித்த இஸ்லாத்தின் கோட்பாடு யாது என்ற பிரச்சினையை மையப்படுத்தி இது பற்றிய ஒரு தெளிவை மக்களுக்கு வழங்கும் நோக்கில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3. ஆய்வின் நோக்கம்

அழகியல் அறுவை சிகிச்சை தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டத்தை அதன் சட்ட மூலாதாரங்களின் துணை கொண்டு ஆராய்தல்.

## 4. ஆய்வு வினா

அழகியல் அறுவை சிகிச்சை தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டம் யாது?

## 5. ஆய்வு முறையியல்

பண்பு ரீதியான ஆய்வு வடிவத்தை தழுவி முன்னைய இலக்கியங்களின் மீளாய்வை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்காக இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல்குர்ஆன், அல்ஹதீஸ் மற்றும் இஸ்லாமிய வரலாறுகள், தற்கால முஸ்லிம் அறிஞர்களின் ஆக்கங்கள், ஆய்வுகள் போன்றவற்றில் காணப்படும் அழகியல் அறுவை சிகிச்சை தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு தொகுத்தறிதல் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 6. இலக்கிய மீளாய்வு

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தொடர்பாக ஆராய்ந்த போது உடலுறுப்பு மாற்றம் தொடர்பான அதிக ஆய்வுகள் இடம்பெற்றுள்ளமையைக் காணக்கிடைத்ததோடு அழகியல் அறுவை சிகிச்சை தொடர்பாகவும் சில ஆய்வுகளே இடம்பெற்றுள்ளன. அவற்றில் சிலவற்றை பின்வருமாறு நோக்கலாம்.

Saujan மற்றும் Mazahir ஆகியோர் இணைந்து மேற்கொண்ட, "உடலுறுப்பு மாற்றமும் இஸ்லாமிய பிக்ஹ் நிறுவனங்களின் பத்வாக்களும்: இஸ்லாமிய சட்ட அடிப்படைகளை மையப்படுத்திய ஆய்வு" என்ற ஆய்வானது 2020 ஆம் ஆண்டு இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது, உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள ∴பத்வாக்களை (மார்க்கத் தீர்ப்பு) சட்டரீதியாக ஆராய்ந்து, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் ஷரீஅத் எவ்வாறு கவனம் செலுத்துகிறது என்பதைப் பற்றி இலங்கை முஸ்லிம்களுக்கு அறிவூட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பண்பு ரீதியான இவ் ஆய்வுக்கான தரவுகள் இரண்டாம் நிலை மூலகங்கள் மூலம் பெறப்பட்டிருக்கின்றன. ஆய்வின்

முடிவினடிப்படையில், இலங்கையில் உறுப்பு மாற்றம் மேற்கொள்வதற்கு பொதுச்சட்டம் அனுமதி வழங்கியுள்ளதுடன் சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் இயங்கும் பிக்ஹ் நிறுவனங்களின் பத்வாக்கள் தெளிவான கவாயித்களின் அடிப்படையில் உறுதியானதாகக் காணப்படுகிறது (Saujan & Mazahir, 2020).

Padela மற்றும் Auda ஆகிய இருவராலும் 2020 இல் "இஸ்லாமிய சட்டத்தில் உறுப்பு தானம் மற்றும் மாற்று அறுவை சிகிச்சையின் தார்மீக நிலை (Moral status): வட அமெரிக்கா பிக்ஹ் கவுன்சிலின் நிலைப்பாடு" என்ற தலைப்பிலான ஆய்வு மேற்கோள்ளப்பட்டுள்ளது. சட்ட வல்லுநர்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள சட்டக் குழுக்களால் வழங்கப்பட்ட உறுப்பு தானம் மற்றும் மாற்று அறுவை சிகிச்சை தொடர்பான தீர்ப்புகளை ஆராய்ந்து, உடல் உறுப்பு தானம் மற்றும் மாற்று நிபுணர்கள், குடும்பங்கள், நோயாளிகள், மருத்துவ மற்றும் உயிரியல் நிபுணர்களுடன் கூடி ஆலோசனை பெற்று இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயிர்வாழும் போது அல்லது இறப்பு பற்றிய இரத்த ஓட்ட அறிவிப்புக்குப் பிறகு உறுப்பு தானம் நிகழ்வதனால் நன்கொடையாளருக்கு ஏற்படும் தீங்கு குறைவாகும். எனவே இதனடிப்படையில், அமெரிக்கா பிக்ஹ் கவுன்சில் நீதிபதிகளின் கருத்துப்படி, உறுப்பு தானம் பல நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இஸ்லாமிய சட்டம் மற்றும் நெறிமுறைகளின் கண்ணோட்டத்தில் தார்மீக ரீதியாக (Morally) அனுமதிக்கப்படுகிறது என்ற முடிவு இந்த ஆய்வினூடாக பெறப்பட்டுள்ளது (Padela & Auda, 2020).

"உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்" என்ற ஆய்வு மலேசியாவில் Shuriye என்பவரால் மேற்கொள்ளப்பட்டு, IIUM Engineering Journal இல் 2011 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மற்றும் நெறிமுறை தாக்கங்களை இஸ்லாமிய கண்ணோட்டத்தில் மதிப்பீடு செய்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும். உயிருள்ள உறுப்புகளை மாற்றுவது 19 ஆம் நூற்றாண்டிலே ஆரம்பமாகியுள்ளதோடு அது தீக்காயங்கள் மற்றும் தோல் குறைபாடுகளை சரிசெய்யும் சிகிச்சைக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஆய்வின் முடிவுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது (Shuriye, 2011).

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம் பற்றிய மற்றுமொரு ஆய்வு 2021 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் Ali என்பவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இஸ்லாத்தில் உடல் உறுப்பு தானம் மற்றும் மாற்று அறுவை சிகிச்சையின் நிலைப்பாடு என்ன? என்ற கேள்வியைத் தீர்க்க மேலும் பல ஆராய்ச்சி மற்றும் சமூகவியல் விவாதம் தேவை என்பதை இவ் ஆய்வு எடுத்துக்காட்டுகிறது (Ali, 2021).

மேலும், மலேசியாவின் சுகாதார அமைச்சு, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம் தொடர்பான ஒரு பதிப்பினை 2011 இல் வெளியிட்டுள்ளது. மலேசியாவில் உள்ள முஸ்லீம் சமூகத்தினரிடையே உறுப்பு தானம் பற்றிய தவறான கருத்து காணப்படுவதன் காரணமாக அங்கு உறுப்பு மற்றும் திசு தான வீதம் குறைவாகவே காணப்படுகிறது. எனவே, இதுபற்றிய ஒரு விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்தப் பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த பதிப்பின் முடிவில், இஸ்லாமிய சட்டத்தின் நோக்கங்களில் மனித உயிர்களைக் காப்பாற்றுவதும் ஒன்றாகும் என்பதனடிப்படையில் உடல் உறுப்புகளை தேவையுடையோருக்கு வழங்க முடியும் என்ற விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது (Malaysia Ministry of Health, 2011).

இஸ்லாத்தில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மற்றும் சிங்கப்பூரில் அதன் பயன்பாடு தொடர்பான ஒரு கையேடு வெளியிடப்பட்டுள்ளது. தொடர்ச்சியான கேள்விகள் மற்றும் பதில்களின் மூலம் இந்தக் கையேடு அமைந்துள்ளமையினால் உறுப்பு மாற்றம் பற்றிய

இஸ்லாமிய கண்ணோட்டத்தை எளிதாகப் புரிந்து கொள்ள இது உதவுகிறது. இதில் உறுப்பு மாற்றம் தொடர்பான பத்வாக்கள் மற்றும் பிரச்சினைகள் தோடர்பாகவும் பேசப்பட்டுள்ளன (Organ Transplant in Islam, n.d).

Karabulut, Aytac மற்றும் Akin என்போரால் Makeup Consumption and Islamic Religiosity (ஒப்பனை நுகர்வு மற்றும் இஸ்லாமிய மதம்) என்ற தலைப்பிலான ஆய்வு 2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் நோக்கமானது, தற்போதைய இஸ்லாமிய உலகில் மிகவும் சர்ச்சைக்குரிய விடயமாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் பெண்களின் ஒப்பனை நுகர்வு பற்றிப் பகுப்பாய்வு செய்வதாகும். இவ்ஆய்வுக்கான தரவுகள் வினாக்கொத்து மூலம் பெறப்பட்டுள்ளன. துருக்கியைச் சேர்ந்த 300 பெண்களிடம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இஸ்லாமிய போதனைகள் பெண்களின் ஒப்பனை செய்யும் ஆர்வத்தைக் குறைப்பதாகவும், வேறு விதமான சில உந்துதல்கள் அவர்களுக்கு மத்தியில் முக ஒப்பனையை ஊக்குவிப்பதாகவும் ஆய்வின் முடிவுகளில் தெரிய வந்துள்ளன (Karabulut, Aytac, & Akin, 2020).

Muslu மற்றும் Demir ஆகியோரால் 2020 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட The Effect of Religious Beliefs on the Attitude of Aesthetic Surgery Operation in Islam என்ற ஆய்வு, அழகியல் அறுவை சிகிச்சையை ஏற்றுக்கொள்வது பற்றிய தனிநபர்களின் அணுகுமுறைகளுக்கு இடையிலான உறவை ஆராய்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது. Plastic surgery clinic இற்கு விண்ணப்பித்தவர்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்கொத்தினை வழங்கி தரவுகளைப் பெற்றுக்கொண்வதன் மூலம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது (Muslu & Demir, 2020).

Rosa மற்றும் Holman (2011) எழுதிய, Social representations of female-male beauty and aesthetic surgery: a cross-cultural analysis (பெண்-ஆண் அழகு மற்றும் அழகியல் அறுவை சிகிச்சையின் சமூக பிரதிநிதித்துவம்) என்ற ஆய்வின் நோக்கத்தினை எடுத்துநோக்குகின்ற போது, இத்தாலி, ஸ்பெயின் மற்றும் ருமேனியா போன்ற ஐரோப்பிய நாடுகளில் பல்வேறு சமூக குழுக்களில் பெண், ஆண் அழகு மற்றும் அழகியல் அறுவை சிகிச்சை ஆகியவற்றுக்கு இடையேயான சமூக - உளவியல் தொடர்புகளை ஆராய்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும். இதன் முடிவுகள் கலாச்சார பகிர்வு மற்றும் குழுக்களுக்கிடையேயான வேறுபாடுகளை முன்னிலைப்படுத்துகின்றன (Rosa & Holman, 2011).

Aldershawi (2017) என்பவர் மேற்கொண்ட, Legal rules for plastic surgery (பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைக்கான சட்ட விதிகள்) என்ற ஆய்வு ஒப்பனை நடவடிக்கைகளுக்கான சட்டக் கட்டுப்பாடுகளை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆய்வாளரின் முடிவின் அடிப்படையில் ஒப்பனை நடவடிக்கைகளுக்கான சட்டக் கட்டுப்பாடுகள் அறுவைச் சிகிச்சைக்கான சட்டக் கட்டுப்பாடுகள் மற்றும் ஒப்பனைச் செயல்பாடுகள் தொடர்பான கட்டுப்பாடுகள் என இரண்டு வகைகளில் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளன (Aldershawi, 2017).

## 7. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

### 7.1. *அழகியல் அறுவை சிகிச்சையின் வகைகள்*

1) குறைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்படும் அழகியல் அறுவை சிகிச்சை (Cosmetic Surgery for Reconstructive Purpose):

இது உடலில் பாதிக்கப்பட்ட பகுதியை புணரமைப்பு செய்வதற்காக, அல்லது உடற் பகுதியில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக மற்றும் உடல் ரீதயாக அனுபவிக்கக் கூடிய துன்பத்தை போக்குவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற அறுவை சிகிச்சை முறையாகும்.

2) அழகை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் அழகியல் அறுவை சிகிச்சை (Cosmetic Surgery for Beauty Purpose):

ஒப்பனை அல்லது அழகியல் அறுவை சிகிச்சை என்பது மனித உடலின் ஒரு பகுதி அல்லது பாகங்களை அழகியல் காரணங்களுக்காக மறுவடிவமைப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற அறுவை சிகிச்சை முறையாகும். குறிப்பிட்ட நபருக்கு உடல் ரீதியாக எவ்வித பிரச்சினைகளும் இல்லாத போதும் அழகை மட்டும் நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற அறுவை சிகிச்சை முறையாகும். ஒப்பனை அறுவை சிகிச்சை சர்ச்சைக்குரிய அம்சமாக காணப்படுகின்றது. இது மனிதனின் சுய விருப்பம், அழகு, மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவு, மனித அடையாளம் மற்றும் கண்ணியம் ஆகிய பாரம்பரிய அம்சங்களுக்கு சவாலாக அமைகின்றது (Al-Allaf, 2016).

### *7.2. அழகியல் அறுவை சிகிச்சை தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டம்*

இஸ்லாமிய ஷரீஆ உடைய நோக்கங்களை, ழரூரிய்யத் (அத்தியவசிய நிலை), ஹாஜிய்யத் (தேவை நிலை), தஹ்ஸீனிய்யாத் (ஆடம்பர நிலை) என்று மூன்று வகையாக பிரித்து நோக்கலாம். ழரூரிய்யத் எனும் அத்தியாவசிய நிலையில் வரக்கூடிய மனிதத் தேவைகளை இமாம்கள் பொதுவாக ஆறு பிரிவுகளாக பிரித்து நோக்குவர். அவை தீனை பாதுகாத்தல், உயிரைப் பாதுகாத்தல், புத்தியை பாதுகாத்தல், பரம்பரையை பாதுகாத்தல், மானத்தை பாதுகாத்தல், செல்வத்தை பாதுகாத்தல் என்பனவாகும். இவை ஒரு மனிதனின் அத்தியாவசிய தேவைகளாக காணப்படுகின்றன. அல்இஸ் இப்னு அப்துல் ஸலாம் எனும் இஸ்லாமிய சட்டக்கலை அறிஞர் எழுதிய கவாஇத் அல் அஹ்காம் (Qawa'id al Ahkam) எனும் புத்தகத்தில் ''இஸ்லாமிய ஷரீஆ உடைய நோக்கத்தை போன்றே மருந்துகள் பெறுதலின் நோக்கமும் மனித நலனை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது என்று குறிப்பிடுகின்றார். அவர் தொடர்ந்து கூறும்போது, மருத்துவம் செய்வதன் நோக்கமானது ஆரோக்கியத்தை பாதுகாத்தல், ஆரோக்கியத்தை மீட்டெடுத்தல், நோயை அகற்றுதல் மற்றும் அதன் விளைவினை குறைத்தல் என்பனவாகும். இந்த நோக்கத்தை அடைவதற்கு, பெரிய தீங்கிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக சிறிய தீங்கொன்றை ஏற்றுக்கொள்ளல், அல்லது ஒரு பெரிய நன்மையை பெற்றுக் கொள்வதற்காக குறிப்பிட்ட நன்மையை இழத்தல் என்பன அவசியமாக இருக்கலாம்'' என்று குறிப்பிடுகின்றார் (Hassan, Majed, & Albar, 2020). இஸ்லாமிய சட்டப்படி இந்த நடைமுறையானது பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுவதோடு, மருத்துவம் உட்பட பல்வேறு துறைகளிலும் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது.

இஸ்லாத்தில் எந்தவொரு செயலிலும் நிய்யத் மிக முக்கியமாகும். ''செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொருத்தே அமைகின்றன. ஒவ்வொருவருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கிறது'' (அறிவிப்பவர் : உமர் இப்னு கத்தாப் (ரலி), ஸஹீஹ் புஹாரி : 1, அத்தியாயம் : 1. இறைச்செய்தியின் ஆரம்பம்). ஒரு செயல் வெளிப்படையில் நல்லதாக தெரியலாம். ஆனால் அது கெட்ட எண்ணத்துடன் செய்யப்படும் போது இறைவனின் கோபத்தை பெற்றுத் தருகிறது. மாறாக ஒருவர் ஒரு நல்ல நோக்கத்துடன் ஒரு செயலை செய்து அதன் மூலம் ஏதேனும் தீங்கு விளைவிக்கப்படும் போது அவர் இறைவனால் மன்னிக்கப்படுகிறார். ''எங்கள் இறைவா! நாங்கள் மறந்து போயிருப்பினும், அல்லது நாங்கள் தவறு செய்திருப்பினும் எங்களைக் குற்றம் பிடிக்காதிருப்பாயாக!'' (அல்குர்ஆன் 2: 286) என்று அல்குர்ஆனில் வரும் பிரார்த்தனை இதனை தெளிவுபடுத்துகின்றது.

இஸ்லாம் அழகை தேடுவதை முதன்மைப்படுத்துகின்றது. ''நிச்சயமாக அல்லாஹ் அழகானவன். அவன் அழகையே விரும்புகிறான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்'' (அறிவிப்பவர்:

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி). இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர் தொடர்களில் வந்துள்ளது. ஸஹீஹ் முஸ்லிம்: 147. அத்தியாயம் : 1 இறைநம்பிக்கை). எனவே அழகை மெருகூட்டுவது என்பது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட அம்சமாகக் காணப்படுகின்றது. ஒருவர் தன்னுடைய உடல் அழகினை மெருகூட்டுவது குறித்த அதிகமான இஸ்லாமிய சட்டவியலாளர்களின் நிலைப்பாடானது, அந்த அழகூட்டலானது தீங்கை விட்டும் நீக்குவதோடு, உடல் மற்றும் உளவியல் ரீதியில் துன்பம் அனுபவிக்கும் மனிதரை அதில் இருந்து விடுவிப்பதை நோக்கமாகவும் கொண்டு அமைய முடியும் என்பதாகும். இதில் “தீங்கு நீக்கப்பட வேண்டும்” என்பது முக்கியமாக நோக்கப்பட வேண்டிய அம்சமாகும் (Nadeem & Sher, 2017) (Hassan, Majed, & Albar, 2020) (Al-Allaf, 2016). உடலில் பாதிக்கப்பட்ட பகுதியை நியாயமான காரணங்களுக்காக மறுசீரமைக்க அழகியல் வழிமுறைகளை கையாள்வதை இஸ்லாம் அனுமதிக்கின்றுது (Hassan, Majed, & Albar, 2020).

மேலும் சில அறிஞர்கள், அழகுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற அறுவை சிகிச்சை மேற்கைத்தேய நாகரிகத்தினால் பின்பற்றப்படுகின்ற பொருள்சார் வடிவமைப்பின் (Materialistic Design) விளைவாகும் என்று குறிப்பிடுகின்றனர். இதற்கு ஹாலிவுட் நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் ஊடகம் என்பன காரணமாக அமைகின்றதாக குறிப்பிடுகின்றனர் (Nadeem & Sher, 2017) (Hassan, Majed, & Albar, 2020) (Atiyeh, Kadry, Hayek, & Musharafieh, 2007). மனிதர்கள் ஆன்மாவை விட உடலுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, தம்மை மென்மேலும் அழகுபடுத்தவும், உடலில் மறு வடிவமைப்பு மேற்கொள்ளவும் (Atiyeh, Kadry, Hayek, & Musharafieh, 2007), இதற்காக தன்னைத்தானே வருத்திக் கொள்வதோடு, அதிகமான பணத்தையும் வீண் விரயம் செய்து இறைவன் படைத்த படைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவும் முனைகின்றனர் (Hassan, Majed, & Albar, 2020).

### *7.2.1. குறைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்படும் அழகியல் அறுவை சிகிச்சை (Cosmetic Surgery for Reconstructive Purpose)*

அனைத்து வகையான பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைகளும் அழகுபடுத்தலை மாத்திரம் நோக்கமாகக் கொண்டதன்று. மாறாக அவை வேறு நோக்கங்களை கொண்டதாக காணப்படவும் முடியும். அவற்றை ழரூரிய்யத் எனும் அத்தியாவசிய நிலையை குறிக்கும் பிரிவின் கீழ் உள்ளடக்க முடியும். இவை சில வேளைகளில் மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத ஒரு விடயத்தை அனுமதிக்கப்பட்டதாக மாற்ற முடியும். உதாரணமாக, சாதாரண அளவில் காணப்படக்கூடிய ஒப்பனை அறுவை சிகிச்சை செய்து மார்பகங்களை Breast Augmentation செய்வது மார்க்கத்தில் தடுக்கப்பட்டுள்ளது. ஆனால் மார்பகங்களுடைய தோற்றம் மந்தமாக காணப்படும் போது அது குறிப்பிட்ட நபரை உளவியல் மற்றும் உடலியல் ரீதியாக ஏதாவது துன்பத்திற்கு உள்ளாக்கும் போது சில சூழ்நிலைகளில் இது அனுமதிக்கப்படுகின்றது. அதே போன்று தீவிர நோய்களிலிருந்து பாதுகாப்பு பெறவும் இது அனுமதிக்கப்படலாம்.

சமகால முஸ்லிம் அறிஞர்கள் குறைபாடுகளை நீக்குதல் போன்ற நியாயமான தேவை காணப்படும் போது பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைக்கு இஸ்லாத்தில் அனுமதி இருப்பதாக உடன்படுகின்றதோடு (Hassan, Majed, & Albar, 2020) (Al-Allaf, 2016) இஸ்லாம் இத்தகைய ஆக்கபூர்வமான செயற்பாடுகளை அனுமதிப்பதோடு அதனை பரிந்துரையும் செய்கின்றது (Al-Allaf, 2016). உதாரணமாக, குறைபாடுகளுக்கு சிகிச்சையளித்தல், நோய் நிலைமைகளின் போது, விபத்துக்கள், தீக்காயங்கள் ஏற்படல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இக்கண்ணோட்டமானது Reconstructive Plastic Surgery எனும் புணரமைப்பு செய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைக்கு பொருந்துகிறது. பொதுவான மனிதத்

தோற்றத்திற்கு மாற்றமாக அமைந்த உடலியல் ரீதியான குறைபாடுகளைச் சரி செய்வதற்காக அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்கு மார்க்கத்தில் அனுமதி உள்ளது. இதற்கான ஆதாரம் வருமாறு. ''அறியாமைக் காலத்தில் நடந்த கிலாப் போரின் போது என்னுடைய மூக்கு உடைபட்டு விட்டது. எனவே நான் வெள்ளியினால் மூக்கு செய்து பொருத்திக் கொண்டேன். அதில் எனக்குக் கெட்ட வாடை ஏற்பட்டது. அதனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்குத் தங்கத்தாலான மூக்கு பொருத்தும் படி உத்தரவிட்டார்கள்'' (அறிவிப்பவர் : அர்ஃபஜா பின் அஸ்அத் (ரலி), நூல்கள் : திர்மிதி, அபூதாவூத்).

எனவே, குறைபாடுகளை நீக்குவதற்காகவோ அல்லது சரி செய்வதற்காகவோ மேற்கொள்ளப்படும் முயற்சியானது இறைவனுடைய படைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக அமையாது. இத்தகைய அறுவை சிகிச்சைகள் அனுமதிக்கப்படக் காரணம் தீங்கை விட்டும் நீக்குவதோடு, உடல் மற்றும் உளவியல் ரீதியில் துன்பம் அனுபவிக்கும் மனிதரை அதில் இருந்து விடுவிப்பதற்குமாகும். உடலில் ஏதாவது காயம் ஏற்படும்போது அது நிவாரணம் பெறுதலில் மருத்துவத்தின் தலையீடு கட்டாயம் தேவைப்படுகின்றது. இது தோற்றப்பாட்டில் ஏற்பட்ட குறைபாடுகளில் இருந்தும் உளவியல் ரீதியாக ஏற்படக்கூடிய மன அழுத்தத்திலிருந்தும் மனிதனை மீட்டெடுக்கிறது.

இவ்வாறானதொரு சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும் போது அத்துறை சார்ந்த ஒரு வைத்தியரே இந்த சிகிச்சையை செய்யவேண்டும். குறித்த சிகிச்சையின் பக்கவிளைவுகள் பற்றி நோயாளிக்கு மிகவும் தெளிவாக உணர்த்துதல் வேண்டும் (Fakeehuddheen, 2017) (Hassan, Majed, & Albar, 2020). குறை நீக்கும் வகையில் உறுப்புக்களில் மாற்றம் செய்தல் அல்லது குறைபாடுள்ள உறுப்புக்களை மீள் வடிவமைத்தல் என்ற நோக்கத்திற்காக அறுவை சிகிச்சை செய்வதை அன்று முதல் இன்று வரை எந்த இஸ்லாமிய அறிஞர்களும் தடுத்தது கிடையாது. உடம்பும் உள்ளமும் நலமாக இருப்பது ஷரீஆவின் பார்வையில் அத்தியாவசியத் தேவை என்ற புரிதலின் பின்புலத்தில் தான் இவ்விடயத்தை அறிஞர்கள் நோக்கியுள்ளார்கள். ஆன்மாவை பாதுகாப்பது போலவே ஆரோக்கியம் முக்கியமானது என்பதை இஸ்லாம் அழுத்திச் சொல்லுகிறது.

### *7.2.2. அழகை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் அழகியல் அறுவை சிகிச்சை (Cosmetic Surgery for Beauty Purpose)*

அழகை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் அழகியல் அறுவை சிகிச்சை இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டிருக்கின்றமைக்கான காரணங்களையும் அவற்றுக்கான ஆதாரங்களையும் பின்வருமாறு நோக்கலாம்.

**படைப்பினங்களின் ஒழுங்கில் மாற்றம் செய்தல்:**

அல்லாஹ் படைத்த படைப்பினங்களின் ஒழுங்குகளில் மாற்றம் செய்தல் எனும் தலைப்பின் கீழ் இதனை நோக்கும் போது, அல்லாஹ் அல்குர்ஆனில், ''திடமாக, நாம் மனிதனை மிகவும் அழகிய அமைப்பில் படைத்தோம்'' (அல்குர்ஆன் : 95:4) என்று கூறுகின்றான். எனவே இறைவன் மனிதனை அழகான அமைப்பில் படைத்துள்ளதற்கு என்றும் மனிதர்கள் இறைவனுக்கு நன்றி உடையவனாக இருத்தல் வேண்டும் (Nadeem & Sher, 2017) (Atiyeh, Kadry, Hayek, & Musharafieh, 2007). அல்குர்ஆனில் வரக்கூடிய பின்வரும் வசனத்தை ஆதாரம் காட்டி சிலர் அறுவை சிகிச்சை மேற்கொள்வது இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட ஒரு செயல் என்று கூறுகின்றனர். ''இன்னும் நிச்சயமாக நான் அவர்களை வழி கெடுப்பேன் அவர்களிடம் வீணான எண்ணங்களையும் உண்டாக்குவேன் (ஆடு, மாடு, ஒட்டகை போன்ற) கால்நடைகளின் காதுகளை அறுத்து விடும்படியும் அவர்களை ஏவுவேன். இன்னும் அல்லாஹ்வின்

படைப்புகளையுடைய கோலங்களை மாற்றும்படியும் ஏவுவேன் என்றும் ஷைத்தான் கூறினான். எனவே எவன் அல்லாஹ்வை விட்டு ஷைத்தானை உற்ற நண்பனாக ஆக்கிக் கொள்கிறானோ, அவன் நிச்சயமாக பகிரங்கமான பெரு நஷ்டத்தை அடைந்தவன் ஆவான்'' (அல்குர்ஆன் : 4:119). ஒருவர் தன்னுடைய தோற்றத்தை மாற்றிக் கொள்வதற்காக பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் அது மேற்கண்ட வசனத்தின் அடிப்படையில் தடுக்கப்பட்ட செயலாகும் என்பதோடு பல இஸ்லாமிய சட்ட அறிஞர்களும் இதனை அனுமதிக்கப்படாத செயலாகவே கருதுகின்றனர் (Hassan, Majed, & Albar, 2020).

படைப்பினங்களின் ஒழுங்கில் மாற்றம் செய்தல் என்பதற்கு ஆரம்பகால அறிஞர்கள் இருவகையில் பொருள் கூறியுள்ளனர்.

ஒன்று: கருத்து ரீதியான பொருள். அதாவது அல்லாஹ்வுடைய தீனை மாற்றுதல், இயல்பாக இறைவன் எந்த நோக்கத்தில் ஒன்றை படைத்திருக்கின்றானோ அந்த இயல்புகளை மாற்றுதல், அல்லாஹ் ஏவியுள்ள கட்டளைகளுக்கு முறணாக செயற்படுதல் பேன்றவற்றை இதற்கு உதாரணமாக கூறலாம்.

இரண்டு: அல்லாஹ் படைத்தவற்றின் வடிவமைப்பில் மாற்றம் செய்தல். இதில் குறிப்பாக மிருகங்களுக்கு விதையடித்தல், பச்சை குத்துதல், புருவ முடிகளை களைதல், பற்களுக்கு இடையில் செயற்கையாக இடைவெளிகளை அமைத்தல், மிருகங்களின் காதுகளை துண்டித்தல், கண்களை பிடுங்குதுல் அல்லது தண்டனை என்ற வகையில் விதையடித்தல், கண்ணைப் பொட்டையாக்குதல், பிற முடிகளை இணைத்து சிகை அலங்காரம் செய்தல் போன்ற செயல்களை உதாராணமாகக் கூறலாம்.

இவை யாவும் ஆரம்பகால அறிஞர்கள் இந்த வசனத்திற்கு கூறியுள்ள பொதுவான கருத்துக்களாகும். இது குறித்து மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்கள் விளக்கமளிக்கும் போது, இந்த வசனம் அல்லாஹ்வுடைய படைப்பினங்களின் வெளித்தோற்ற வடிவமைப்பில் மாற்றம் செய்வதையல்ல குறிப்பிடுகின்றது என்றும் இங்கு நாடப்படுவது அல்லாஹ் எந்த நோக்கத்திற்காக ஒன்றை படைத்திருக்கின்றானோ அந்த நோக்கத்திற்கும் இயல்புக்கும் மாற்றமாக செயற்படுவதையே குறித்த அல்குர்ஆன் வசனம் சைத்தானிய கருமங்களாக குறிப்பிடுகின்றன என்றும் கூறுகிறார். அதற்கு உதாரணமாக ஓரினச் சேர்க்கை, இயற்கைக்கு மாறான பாலியல் புணர்ச்சி, துறவறம், பிரம்மச்சரியம், மலடாக்கும் செயற்பாடு, பெண்கள் அவர்களுக்கேயுரிய பிரத்தியேகமான பணிகளை செய்யாது விடல் அல்லது ஆண் பெண்ணின் பணிகளை செய்தல், பெண் ஆணுக்குரிய பணிகளை செய்தல் போன்றவையே அல்லாஹ்வுடைய படைப்பினங்களின் ஒழுங்கில் ஏற்படுத்தும் மாற்றங்களாகும் என விளக்கமளித்துள்ளார். இதுவே சைத்தானிய தூண்டுதல்களால் நடைபெறும் தீய கருமங்களாகும் என மௌதூதி சுட்டிக்காட்டுகிறார் (Fakeehuddheen, 2017).

**வீண்விரயம்:**

அழகை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் அழகியல் அறுவை சிகிச்சை வீண்விரயமாகும். இதற்கென அதிக பணம் விரயம் செய்யப்படுகிறது. அந்த வகையில் இஸ்லாம் வீண்விரயத்தை வெறுக்கின்ற மார்க்கமாகையால் இந்த முறையிலான அறுவை சிகிச்சையை அது ஆதரிப்பதில்லை.

அல்லாஹ் அல்குர்ஆனிலே, ''வீண் விரயம் செய்யாதீர்கள். நிச்சயமாக அவன் (அல்லாஹ்) வீண் விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை'' (அல் அன்ஆம்: 141).

''நிச்சயமாக விரயஞ் செய்பவர்கள் ஷைத்தான்களின் சகோதரர்களாவார்கள். ஷைத்தானோ தன்னுடைய இறைவனுக்கு நன்றி கெட்டவனாக இருக்கிறான்'' (அல் இஸ்ரா: 27) என்று பல இடங்களில் வீண்விரயத்தைப் பற்றி பேசியுள்ளான்.

மேலும், நபியவர்களும் வீண்விரயம் தொடர்பாக பல ஹதீஸ்களைக் கூறியுள்ளார்கள். ''வீண் விரயம் அல்லது பெருமை ஆகியன கலக்காத விதத்தில் உண்ணுங்கள்! பருகுங்கள்! தர்மம் செய்யுங்கள்! அணியுங்கள்!'' (நஸாயி, இப்னு மாஜா).

''(அல்லாஹ் உங்களிடத்தில்) செவியுற்றவற்றையெல்லாம் கதைப்பதையும் அதிகமாகக் கேள்வி கேட்பதையும் பணத்தை வீணாகச் செலவு செய்வதையும் வெறுக்கின்றான்'' (புகாரி, முஸ்லிம்).

எனவே, மேற்கூறிய அல்குர்ஆன் வசனங்கள் மற்றும் ஹதீஸ் ஆதாரங்களிலிருந்து இஸ்லாம் வீண்விரயத்தை வன்மையாகக் கண்டிக்கிறது என்பது தெளிவாகிறது.

**உடல் சிதைக்கப்படுகின்றமை:**

இஸ்லாம் உடலை சிதைப்பதை முற்றாக தடை செய்கின்றது. ஒப்பனை அறுவை சிகிச்சையும் (Cosmetic Surgery) உடலை வேண்டுமென்றே சுய சிதைவு செய்வதாகக் கருதப்படலாம் (Nadeem & Sher, 2017) (Hassan, Majed, & Albar, 2020) (Atiyeh, Kadry, Hayek, & Musharafieh, 2007). சாதாரணமான உடல் அமைப்பினை மேலும் மெருகூட்டல், கவர்ச்சிகரமாக மாற்றுதல், அதனூடாக சுயமரியாதையை பெற்றுக்கொள்ளுதல் என்பன நோக்கமாக அமையும் பொழுது ஒப்பனை அறுவை சிகிச்சை அனுமதிக்கப்படமாட்டாது. உதாரணமாக Breast Augmentation, Tummy Tucks (Abdominoplasty), Face Lifts போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்த நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படக்கூடிய அறுவை சிகிச்சைகளை அல்குர்ஆனும் ஹதீஸூம் வன்மையாக கண்டிக்கின்றன. ஏனெனில், இது இறைவன் ஒரு படைப்பினை உருவாக்கிய காரணத்தோடு முரண்படுவதாக அமைந்து விடுகின்றது. இவ்வகையான அறுவை சிகிச்சைகளுக்கு பின்னாலுள்ள காரணம் அழகை மெருகூட்டுவது ஆகும். இது இவ்வகையான அறுவை சிகிச்சைகள் அனுமதிக்கப்படுவதற்கான நியாயமான காரணமாக அமையாது. ''நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். பச்சை குத்திவிடும் பெண்கள், பச்சை குத்திக்கொள்ளும் பெண்கள், முகத்தில் முளைத்திருக்கும் முடிகளை அகற்றக் கேட்டுக் கொள்ளும் பெண்கள், அழகிற்காக அரத்தால் தேய்த்துப் பல்வரிசையைப் பிரித்துக் கொள்ளும் பெண்கள், (மொத்தத்தில்) இறைவன் அளித்த உருவத்தை மாற்றிக் கொள்ள முயலும் பெண்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்'' (ஸஹீஹ் புகாரி : 5931, அத்தியாயம் : 77. ஆடை அணிகலன்கள்).

எனவே இவ்வகையான அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள கூடிய முஸ்லிம் அறுவை சிகிச்சை நிபுணர் ஒருவருடைய செயல் இஸ்லாத்தின் பார்வையில் குற்றமாகக் கருதப்படுகின்றது. அது மாத்திரமல்லாது குறித்த சிகிச்சை மேற்கொள்ளப்படும் போது அந்த சிகிச்சையின் பக்கவிளைவுகள் பற்றி நோயாளிக்கு மிகவும் தெளிவாக உணர்த்துதல் வேண்டும் (Fakeehuddheen, 2017) (Hassan, Majed, & Albar, 2020).

**நோக்கம் தவறானதாகக் காணப்படுதல்:**

தவறான நோக்கத்திற்காக ஒப்பனை அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வது தடுக்கப்பட்ட செயலாகும். உதாரணமாக மற்றவர்களை ஏமாற்றுவதற்காக ஒப்பனை அறுவை சிகிச்சைகளை

மேற்கொள்ளல். அதாவது திருமணம் முடிக்க இருக்கின்ற ஒரு நபரை ஏமாற்றும் நோக்கில் தன்னை அழகாக காட்டுவதற்காக ஒருவர் இவ்வாறான ஒப்பனை அறுவை சிகிச்சையை மேற்கொள்வதை குறிப்பிடலாம். அல்லது மாறுவேடம் இடுவதற்காக (குற்றம் செய்த ஒரு நபர் அதிலிருந்து தப்பிப்பதற்காக தன்னை மாற்றிக் கொள்ளுதல்) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இன்னும். பாலின மாற்று அறுவை சிகிச்சையும் இஸ்லாத்தில் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது (Atiyeh, Kadry, Hayek, & Musharafieh, 2007) (Hassan, Majed, & Albar, 2020).

மேலும், சில அறிஞர்களின் கருத்துப்படி ஒவ்வொரு வகையான ஒப்பனை அறுவை சிகிச்சையும் தனித்தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு வகையான ஒப்பனை அறுவை சிகிச்சையும் அதற்கென்று தனியான தன்மையை கொண்டுள்ளதால் அதைப் பற்றி ஆராய்ந்து அதற்கான சட்டத் தீர்ப்பை தேர்தல் வேண்டும் என்று கூறுகின்றனர்.

இதனடிப்படையில், The International Islamic Fiqh Academy 2007 ஆம் ஆண்டு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை குறித்து கலந்துரையாடி பின்வரும் தீர்மானங்களை வெளியிட்டது (Fakeehuddheen, 2017) (Hassan, Majed, & Albar, 2020).

1. "திடமாக, நாம் மனிதனை மிகவும் அழகிய அமைப்பில் படைத்தோம்" (அல்குர்ஆன் : 95:4) எனும் அல்குர்ஆன் வசனத்திற்கு இணங்க உடல் உறுப்புகளின் வடிவத்தை அதன் வழமையான நிலைமைக்கு மீட்டெடுக்கவும், உடலின் இயல்பான செயல்பாட்டை மீட்டெடுக்கவும், பிறவி குறைபாடுகளை சரிசெய்தல் (உதாரணமாக பிளந்த உதடு, சிதைந்த மூக்கு, அதிகப்படியான விரல்கள் மற்றும் பற்கள் போன்றன காணப்படுதல்), தீக்காயங்கள், விபத்துகளால் ஏற்படும் குறைபாடுகளை சரிசெய்தல், வழமையான ஒழுங்கமைப்புக்கு மாற்றமான தோற்றத்தில் உள்ள உறுப்புக்களை இயல்பான தோற்றத்திற்கு வடிவமைப்பு செய்தல் போன்ற ஷரீஆ அங்கீகரிக்கும் நலன்களை கருதி பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்யலாம். இப்படியான நோக்கங்களுக்காக செய்யப்படும் சத்திரசிகிச்சை முறையை மார்க்கம் அனுமதிக்கிறது.
2. மருத்துவ சிகிச்சையாக கருதப்படாத அறுவை சிகிச்சை மற்றும் சாதாரண மனிதனின் தோற்றத்தில் மாற்றத்தை உருவாக்கும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் Cosmetic Plastic Surgery தோற்றத்தை மாற்ற வேண்டும் என்ற ஒருவருடைய ஆசைக்காக, முகத்தின் வடிவத்தை குறிப்பிட்ட தோற்றத்துடன் தோன்றும் வகையில் மாற்றுவதற்காக, ஏமாற்றும் நோக்கத்துடன் மற்றும் நீதியை தவறாக வழிநடத்தல் போன்ற நோக்கத்திற்காக, மூக்கு அல்லது கண்களின் வடிவத்தை மாற்றுவதற்காக அல்லது உதடுகள் அல்லது கன்னங்களை பெரிதாக்க அல்லது குறைப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற சத்திரசிகிச்சை முறையை மார்க்கம் தடை செய்கின்றது.
3. அறுவை சிகிச்சை உட்பட அங்கீகரிக்கப்பட்ட அறிவியல் வழிமுறைகளை பயன்படுத்தி உடல் எடையை குறைக்கலாம். உடல் பருமன் ஒரு மருத்துவம் சார்ந்த ஒரு பிரச்சினையை உருவாக்கும் போது அறுவைசிகிச்சை தவிர வேறு எந்த வழியும் இல்லை எனும் நிலை உருவாகும் போது அறுவை சிகிச்சை மேற்கொள்ள இஸ்லாம் அனுமதியளிக்கின்றது.
4. அறுவை சிகிச்சை அல்லது ஊசியை பயன்படுத்தி சுருக்கங்களை நீக்க இஸ்லாத்தில் அனுமதி வழங்கப்படுவதில்லை. ஆனால் அது ஒரு மருத்துவம் சார்ந்த பிரச்சினையை உருவாக்கும் போது அதற்கு இஸ்லாம் அனுமதியளிக்கின்றது.

## 8. முடிவுரை

இஸ்லாம் என்றும் மனித நலனை முதன்மைப்படுத்துகின்றது. அதனடிப்படையில் அழகியல் அறுவை சிகிச்சைகளை பொருத்தவரை அது தீங்கு களையப்பட வேண்டும் என்ற இஸ்லாத்தின் சட்ட விதியை அடிப்படையாகக் கொண்டு, உடல் மற்றும் உளவியல் ரீதியில் துன்பம் அனுபவிக்கும் மனிதரை அதில் இருந்து விடுவிப்பதை நோக்கமாகவும் கொண்டு மேற்கொள்ளப்படும்போது இஸ்லாத்தின் பார்வையில் அனுமதிக்கப்பட்டதாக மாறுகின்றது. மாறாக சாதாரணமான உடல் அமைப்பினை மேலும் மெருகூட்டல், கவர்ச்சிகரமாக மாற்றுதல், அதனூடாக சுயமரியாதையை பெற்றுக்கொள்ளுதல் என்பனவற்றை நோக்கமாக கொண்டு மேற்கொள்ளப்படக் கூடிய ஒப்பனை அறுவை சிகிச்சை முறைகள் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டவையாக காணப்படுகின்றன.

## References


Al-Allaf, M. (2016). The technique of soul removal plastic surgery:. *Islamic Bioethics, 35*, 131-150.

Aldershawi, M. R. (2017). Legal rules for plastic surgery. *Ilahiyat Fakultesi*.

Ali, J. A. (2021). Islamic Perspectives on Organ Transplantation:. *religions, 12*(8), 576. doi:https://doi.org/10.3390/rel12080576

Atiyeh, B. S., Kadry, M., Hayek, S. N., & Musharafieh, R. S. (2007). Aesthetic Surgery and Religion: Islamic Law Perspective. *Aesthetic plastic surgery, 32*(1), 1-10. doi:10.1007/s00266-007-9040-7

Bagnid, I. A. (2007). Perception of Islamic law on plastic surgery. Saudi Arabia.

Fakeehuddheen, M. (2017, March 2017). *அறுவை சிகிச்சைக்கு வித்திட்ட இஸ்லாம்*. Retrieved from Sri Lanka MUSLIMS: https://srilankamuslims.lk/%E0%AE%85%E0%AE%B1%E0%AF%81%E0%AE%B5%E0%AF%88-%E0%AE%9A%E0%AE%

*Global Cosmetic Surgery and Services Market - Industry Trends and Forecast to 2027*. (2020, May). Retrieved from Data Bridge Market Research: https://www.databridgemarketresearch.com/reports/global-cosmetic-surgery-and-services-market

Goudreau, J. (2011, June 16). *Top 10 Hidden Dangers of Cosmetic Surgery*. Retrieved from Forbes: https://www.forbes.com/2011/06/16/top-10-dangers-cosmetic-surgery_slide.html

Hassan, C. P., Majed, C. P., & Albar, M. A. (2020, April 29). *Plastic Surgery in daily practice: Islamic Perspective*. Retrieved from JBIMA: https://jbima.com/article/plastic-surgery-in-daily-practice-islamic-perspective/

Illiades, C. (2020, November 1). *The Risks of Cosmetic Surgery*. Retrieved from healthgrades: https://www.healthgrades.com/right-care/cosmetic-procedures/the-risks-of-cosmetic-surgery

Karabulut, F., Aytac, M. B., & Akin, E. (2020). Makeup Consumption and Islamic Religiosity. *Human Arenas, 3*, 534-551. doi:https://doi.org/10.1007/s42087-020-00106-w

Kathirawan, K. (2020, July 1). *அழகியல் சிகிச்சைகள் அவசியம்தானா?!* Retrieved from Kungumam: http://kungumam.co.in/docArticalinnerdetail.aspx?id=3646&id1=142&issue=20200701

Malaysia Ministry of Health. (2011). *Organ Transplantation from the Islamic Perspective.* Putrajaya: Malaysia Department of Islamic Development (JAKIM).

Marky, C., & Marky, P. (2009). ஒப்பனை அறுவை சிகிச்சை பெறுவதில் இளம் பெண்களின் ஆர்வம். *பாலியல் பாத்திரங்கள், 61*, 158-166. Retrieved from ghypay; ghj;jpuq;fs;.

Muslu, U., & Demir, E. (2020). The Effect of Religious Beliefs on the Attitude of Aesthetic Surgery Operation in Islam. *Journal of Religion and Health, 59*(2), 804-815. doi:https://doi.org/10.1007/s10943-019-00767-0

Nadeem, M., & Sher, M. K. (2017). MODERN REPRODUCTIVE TECHNOLOGIES, AESTHETIC SURGERY AND CONTRACEPTION IN ISLAMIC LAW: A CASE STUDY OF KHYBER PAKHTUNKHWA. *Journal of Law and Society, XLVIII*(70).

Obeidat, H. M. (2016). Religious Fundamentals for Modern Aesthetic Surgery. Jaamiah Al-Imam Muhammad Bin Suood, Saudi Arabia.

(n.d). *Organ Transplant in Islam.* Singapore.

Padela, A. I., & Auda, J. (2020). The Moral Status of Organ Donation and. *Transplantation direct, 6*(3), e536. doi:https://doi.org/10.1097/TXD.0000000000000980

Rosa, S. A., & Holman, A. (2011). Social representations of female-male beauty and. *Temas em Psicologia, 19*(1), 75-98.

Saujan, I., & Mazahir, S. M. . (2020). Organ Transplantation and Fatwas of Islamic Fiqh Academies: Study Based on Islamic Legal Maxims. In S. E. U. of S. L. Faculty of Islamic Studies and Arabic Language (Ed.), *The Moderate Approach to Human Development through Islamic Sciences and Arabic Studies* (Vol. 2017, Issue December, pp. 220–234). Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/5127

Schaefer, A. (2019, April 6). *10 of the Most Plastic Surgery Complications*. Retrieved from healthline: https://www.healthline.com/health/most-common-plastic-surgery-complications#blood-loss

Shuriye, A. O. (2011). Muslim Views on Organ Transplant. *IIUM Engineering Journal, 12*(5). doi:10.31436/iiumej.v12i5.260

Technavio. (2021, January 21). *Cosmetic Surgery Market to Grow by $ 11.24 Billion During 2020-2024 | Rising Demand for Minimally Invasive and Non-Invasive Surgeries to be Key Trend | Technavio*. Retrieved from businesswire: https://www.businesswire.com/news/home/20210121005831/en/Cosmetic-Surgery-Market-to-Grow-by-11.24-Billion-During-2020-2024-Rising-Demand-for-Minimally-Invasive-and-Non-Invasive-Surgeries-to-be-Key-Trend-Technavio

Torgerson, C. (2021). *The Top 5 Reasons for Cosmetic Plastic Surgery*. Retrieved from drtorgerson: https://drtorgerson.com/surgical-procedure/the-top-5-reasons-for-cosmetic-plastic-surgery/